ப்ரஹ்மவித்யா.

௩-ம் புத்தகம்

பத்திரகிரயம்
1௵ 2—12—0
6௴ 1—8—0
௩௴ 0—14—0
1காபி-0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

௰௩-ம் இலக்கம்

பத்திரகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்குஅனுப்புதல்வேண்டும்.

BRAHMAVIDYAPATHRIKA.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯௵ மார்ச்சு௴ ௩௧௨ சர்வதாரி௵ பங்குனிமீ ௨௰௨

[illegible]

[illegible]

நம் ப்ரம்மவித்தியா பத்திரிகாபிமானிகளில் கையொப்பப் பணம் அனுப்பாதிருக்கும் நண்பர்களே!

இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி இப்பொழுது 9-மாசங்கள் கழிந்தும் நீங்கள் இதுவரையில் உங்கள் கையொப்பத் தொகைகளை யனுப்பிவிட இசையாது ஆலசியமாயிருந்தால் இப்போது நன்மையை நாம் தளர்வுறாது நடத்துதல் எப்படியாம். உங்கள் பேருதவிகளையே ஆதாரமாக நம்பி இவ்வுலோகோபகார நன்முயற்சியை மேற்கொண்ட நாம் அது கிடைக்கப்பெறாதொழியின் மற்றதற்கு யாதுசெய்வேம். பத்திரிகை அச்சிடுதற்கும் காகிதமுதலியன வாங்குதற்கும் தபாற்செலவு கொடுத்தற்கும் அவ்வப்பொழுது எவ்வளவு பொருள் வேண்டுமென்பது நீங்களறியாததன்றே. உங்களில் ஒவ்வொருவரும் "நம் தொகை சிறிதுதானே இஃதவர்க்கோர் பொருட்டாமெல்ல வனுப்புவோம்" என எண்ணிப் பெரும்பாலாரங்ஙனமிருப்பின், நஞ்சருமம் எக்கதியுறும். ஆதலின், இவைகளைச் சற்றே சிந்தித்து உங்கள் கையொப்பத் தொகைகளை உடனே அனுப்பிவிடுதலே நீங்கள் எமக்குச் செயற்கரியதொரு பேருபகாரமாம்.

திருநீறு.

தொடர்ப்பு.

—:o:—

இனி இவர் மனங்களிக்க அப்பாசுபதபதத்துடன் கூடிய சொற்றொடர்பால் விரிக்கப்படும் திருநீறு அவைதிகமெனவொப்பினும் ஜாபாலோபநிடதத்தில் "சிவாக்கினிஉற்பத்தியானது சிவயோகிகளுக்கு" என ஓர்வகைச் சைவர்களாகிய சிவ யோகிகளை நோக்கி விதிக்கப்பட்ட திருநீற்றைப்போல் இதுவும் அமையுமென்றறிக. அதுகொண்டே திருநீறெல்லாம் தாந்திரிகமெ

[illegible]

னக்கோடல் உண்மையறியவிரும்பும் உயர்ந்தோர்க்கழகன்று. இவர் அறிந்தபட்டில் திருமண் திருநீறு இவ்விரண்டும் முமுட்சுக்களுக்கே என ஏற்படினும் அதை விகற்பமாய், யாகத்திரவியத்தை நெல் அல்லது யவம் எனக்கொண்டதுபோல் ஏன் கொண்டாரில்லையெனின், அவ்விஷயத்தில் அவர் கொண்ட பரமேசுவர துவேஷம் அவர்கண்களையும் செவிகளையும் அவ்வுபநிடதங்களை முற்றிலு மறியவொட்டாது தடுத்தாட்கொண்டு அவ்வாசுதேவோபநிடதத்தின் கண்ணே திருப்பி "முமுட்சுவானவன் இதைத் தரித்தல்வேண்டும்" "தரிப்பதால் முத்தியைக்கொடு" என்னும் இவ்விருவசனங்களைப் பார்க்கச் செய்ததேயன்றிக் காலாக்கினிருத்திரமுதலிய உபநிடதத்தில் எடுத்துப் பன்முறை ஓதப்பட்ட முமுட்சுபதத்தை மறைத்தது. பாருங்கள்! இவர் பிரமதேவன்முதலியோர் கோபிசந்தனம் தரித்தாரென வாசுதேவோபநிடதம் கூறுவதாய் அதை மட்டிற் புகழ்ந்தாரேயன்றிப் பலவேதபுராணங்களில் நாராயணன்முதலியோர் திருநீறு தரித்ததாயிருப்பதை இவர் அறிந்திலர். அங்ஙனம் அவ்வாசுதேவோபநிடதத்திற்கேட்ட நாரதனை இவர் வெகுமானித்ததுபோல் ஜாபாலத்தில் இத் திருநீற்று மான்மியத்தைப் பரமேஸ்வரனிடம் கேட்ட ஸ்ரீமந்நாராயணனை வெகுமானியாதது யாதுகாரணம்பற்றியோ! யாக்ஞவல்கியர், ஜனகர், சுகர், வாமதேவர் முதலிய மகரிஷிகளைச் சிஷ்டரெனக்கொள்ளாது எங்கேயோ தமிழ்நாட்டுவேதியருள் ஓர்பாலாரான வடதேச வடபர்களைச் சிஷ்டர்களாகக் கொண்டார். இஃதென்ன விந்தை!! இவர்கொள்கையின்படி அம்மரபினரேனும் முழுவதும் நமது நண்பர் சொல்லியபடி சிஷ்டர்களாவரோ வென்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வாம். அவாகளிலும் பெரும்பான்மையோர் திருநீறு திருக்கண் மணிமாலை பூண்டொழுகுகின்றார். காஞ்சிமண்டலத்தில் அம்மரபினரெல்லோரும் திருநீறே தரித்துவருகின்றார்கள். அவர்களுட்சிலர் ஏதோ காரணவசத்தால் தென்னாட்டுள்புகுந்து இவ்வகைகோபீசந்தனமுதலியவற்றை அணிந்தாரென்றே ஊகமுடையோர் அறிகின்றார்கள். இனிக் கோபீசந்தன மணிவோரும் நமது நண்பர்கூறியவாறு நடுவில் வெளியிட்டுத் தரிப்பதில்லை. ஒருக்கால நமது நண்டர் கோபீசந்தனம் தரிக்காதவனாயும் நடுவில் வெளியில்லாப் புண்டரம் அணிடவனையும் அசிஷ்டனெனக்கொள்வரேல் இவர் ஒப்பத்தக்க ஓர் சிஷ்டரும் உலகத்திரார். அந்தோ! வெளியுள்ள புண்டரந்தரிப்போரெல்லாம் வெண்மண்கொண்டே தரிக்கின்றார்கள். கோபீசந்தன மணிபவரெல்லாம் வெளியற்றதாகவே தரிக்கின்றார்கள். நமதுநண்பரெடுத்துக்காட்டிய ("இடைவெளியில்லாத ஊர்த்தபுண்டரத்தை எவ்வந்தண அதமன்தரிப்பான் அவன் அக்கு தம்பிராட்டியாருடன் எழுந்தருளிய திருமாலை மறைப்பான்" இடைவெளியில்லாத ஊர்த்தபுண்டரத்தை எவ்வந்தணர் தரிப்பார் அவர் நெற்றியில் நாயின் அடியைத்தரிக்கின்றார்கள்") என்னும் இவ்விருவசனங்களால் அவ்வித கோபீசந்தன மணிபவர்கள் அரித்துவேஷிகளும் நாயடியைத் தரிக்கும் அசிஷ்டர்களும் ஆகின்றார்களே! இனி இவர்கூறும் புண்டரத்தைத் தரித்தவர் சிஷ்டர் என்றும் அவ்விதச் சிஷ்டர்தரித்தால் அப்புண்டரம் மேன்மையுடைத்தென்றும் கூறத் துணிவரேல் இஃது ஒன்றையொன்று பற்றுதலென்னும் குற்றம் இவரைவிட்டொழியாது.

[illegible]

இதற்கு ஏதேனும் ஒருசமாதானம் இவர் உணர்ந்திடினும் இவர்கூறியபடி கோபீசந்தனத்தால் இடைவெளியுள்ள புண்டரத்தைத் தரிக்கும் சிஷ்டர் இவ்வுலகத்தில் எங்குங்காணேமே! ஓர்கால் "எமது ஆசிரியர் புதிதாய்க்கண்டுபிடித்த இம்மதத்தை அநுஷ்டிக்கும் சிஷ்டரும் வடதேச வடமர்களுமாகிய நாங்களிருக்கின்றேம்" என்று கூறிடுவரேல் சிஷ்டரென்னுஞ் சொல்லுக்கு இனி இவரிடம் நாம் பொருள் தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி அதற்கு வேறு வழியில்லை. உண்மையில் இவர் கூறியவாறு புண்டரந்தரிப்பவர் ஐவரோ அறுவரோ உளர். அவருள் அவ்வடதேச வடமரென்பவர் இருவர் மூவர். இப்பதினெட்டுக்கோடி ஆரியர்களின் ஆசார நிர்ணயத்துக்கு இம் மும்மூர்த்திகளே போதும்! போதும்!! ஒருசமயம் அவர் தாமே சிஷ்டரெனக்கொள்ளினும் இம்மூவர் தரித்தல் ஊர்த்துவபுண்டரத்துக்கு மாகாத்மியமாய் அமைதல் யாங்ஙனமோ! ஐயோ! பரிதாபம்! பரிதாபம்!! இவர் இங்ஙனமெழுதியாவது தம்மனத்தை ஒருவாறு திருப்திசெய்துகொள்ளுவாராக. அவர் என்செய்வார்! அவர்வழிபடுங் கடவுளாகிய விண்டுவும் அவர்மதத்தினரும் அவர் மதக்குறிகளும் மாறிமாறிப் பலதிருவுருவங்களைப் பெறுகின்றன. மதத்தவர் ஓரிடம் பட்சபாதத்தால் மற்றதைத் தூஷித்தலேயே விரதமாகக்கொண்டவர்கள். இவர் நிபந்தனைக்காரர்கள் எழுதிய வாக்கியங்களைக் கொண்டு அவர் எழுதிய சித்தாந்தங்களுக்கு மாறுகோளாய்த் தாம் ஒவ்வோர் புண்டரத்தவர் மற்றவர் புண்டரத்தைத் தூஷித்தலே இன்றியமையாதெனச் சித்தாந்தமாக்கினர். நமது நண்பர் இச்சிவதர்மத்தை வெறுத்ததுபோல யாமும் வைணவதர்மத்தை வெறுத்தெழுத எமது நூலிதை இடந்தந்திற்றிலது. எமதபிப்பிராயம் யாதெனில், மேன்குலத்தார் கொண்டதும் வீடே பயனாகக் கொண்டதும் பரமேசுவரனது பரமப்பிரீதிக்கிடமானதும் சர்வவேதங்களிலும் புகழப்பதும் பெற்றதும் பல்லாசிரியர்கள் அநுட்டித்ததும் ஸ்ரீபோதாயன முனிவர்முதலியபலமுனிவர் எடுத்தோதியதும் வீடுபெறவிருப்போர்க்கென முன்வந்ததும் தாந்திரிகர் வைதிகர் எனுமிருதிறத்தார்க்கும் இன்றியமையாததுமான இத் திருநீறணிதலே நம்மவர்க்குப்பரமதர்மமென்பதாம். இனிப்போதாயனமகரிஷியினது திருவாக்கும் "பூதியைத்தவறற்க" என்னும்வேதவாக்கியத்தைத்திருநீறணிதற்பொருட்டாய் விளக்குகின்றது. அஃது ஜாபாலத்தில் திருநீற்றின் எண்பெயர்களைக்குறிக்குமிடத்து "ஐஸ்வரியகாரணமாதலாற் பூதியெனப்படுமே" எனப் பூதியென்னுஞ்சொல்லின் காரணப் பொருள் வெளியாகின்றமையால் அதேபொருளைஸ்ரீமதுஆசிரியர் சங்கராமுனிவரும் மனதிற்கொண்டு "ஐஸ்வரியகாரணத்தைத் தவறற்க" என்று பொருள்படுத்தி ஜாபாலம், தைத்திரீயம் இவ்விரண்டு உபநிடதங்களையும் ஒருபொருளுள்ளனவாக முடித்தார். மேலும் "இவையெல்லாம் ப்ரம்மன், விட்டுணு, ருத்திரன், இந்திரன், அவர்கள்பிறக்கின்றூர்கள்; காரணம்பிறப்பதில்லை" என்று தொடங்கி "மற்றதெல்லாம் விட்டொழித்து மங்களத்தை அளிக்கும்சிவனே தியானிக்கப்பாலன" என்றமுடிந்த வசனத்தால் அதர்வசிரோபநிடதமும் மற்றும் பலஉபநிடதங்களின் பலவசனங்களாலும் அப்பரமசிவனே பரப்பிரமவஸ்துவென விளக்கியிருந்தலாலும் அஃது மற்றெவ்வாதிகளாலும் மறுக்கக்கூடாமையாலும் அவனது வழிபாட்டுக்கு இன்றியமையாத இத்திரு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

—*—

[illegible]

[illegible]

நீறணிதல் பிரமவித்தையின் அங்கமென்றே நாம் துணிந்தசறுவாம். இனி விரிவைப் "புண்டரமஹாத்மியம்" என்னும் புஸ்தகத்திற்காண்க. இனிப் பலவிஷயங்களைச்சேர்த்து வெகு விரிவாய் "வைதிகபுண்டரவைஜயந்தி" என்னும் புஸ்தகத்தை ஒருவர் எழுதியிருக்கின்றார். அளவில் பெருமைபெற்ற அத்திருநீற்றுக்கு அதுவும் ஒருசிறிதேயென்பது எமதுகொள்கை. ஆதலால் நாம் ஈண்டுச் சுருக்கினோம். இனி நமதுநண்பர் எடுத்துக்காட்டிய நிந்தாவசனங்களெல்லாம் "நஹிநிந்தை" யாய் ஒழியுமென்றொதுக்குக. கவிதார்க்கிகசிங்க மென்னும் ஓர் பரசமயாசாரியர் தாம் எழுதிய "பாஞ்சராத்திரரக்ஷை" என்னுங் கிரந்தத்தில் "பாஞ்சராத்திரத்தில் வைகானசத்தையும் வைகானசத்திற் பாஞ்சராத்திரத்தையும் தூஷித்திருக்கின்றதே; இதற்குக் கதியாதெனவினவி இஃது மற்றொருவரால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லது ஒன்றைப்புகழவேண்டி மற்றொன்றை நிந்தித்திருக்கலாம் என்றிருப்பதை இங்கு ஒருவாறு கூட்டுக. இங்கு முடிபுணரஇது; கீதாசாஸ்திரத்தின்கண் "எனது மதத்தை எவர்கள் அநுட்டிக்கின்றார்களில்லையோ" என்றுதொடங்கித் தனதுமதத்தை அநுட்டிக்காதவர்களைப்பற்றி நிந்தித்திருத்தலானும் ஜாபாலோபநிடதத்தில் "பரமேஸ்வரனதுதிருவருளால் விண்டு இத்திருநீற்றுமான்மியத்தைப்பெற்று வெளியிட்டார் என்றிருத்தலானும் "எல்லாப்பூதங்களிலும் இருதயத்தின்கண் ஓ அர்ச்சுனா! ஈஸ்வரன் இருக்கின்றான்— ஓ பாரதா! அவனையே முழுநம்பிக்கையுடன் சரணடை" என்று கீதையின்கண் ஸ்ரீகண்ணபிரான் திருவாக்கிருத்தலானும், அதுவே ஸ்ரீவாசுதேவனது கொள்கையாதலால் அதை ஒவ்வொரு பாகவதர்களும் அநுட்டித்தல் இன்றியமையாது. அநுட்டிக்காதவர்க்குப் பாசந்தொலைதலும் பசுபதியின் கிருபை கிடைத்தலும் அரிதெனஅறிக. ஆதலாற்றான் ஆசிரியர் அரதத்தனார் "பிரமனையும் விண்டுவையும் மற்றைய தேவர்களையும் வழிபடுவது பயனுளதேயாயினும் "யதாசர்மவது" என்றுதொடங்கிய மந்திரம் உம்மிடம் அன்புற்றவர்க்கு மற்றைய கடவுளரைவழிபடும் எழ்மையைப்பொறுக்காது" என்பதாகிய எழுதினார். விரிக்கிற் பெருகும். சுபம்.

விதண்டா மறுப்பு முற்றுப்பெற்றது.

பிருகுவம்ச சரித்திரம்.

(முன் தொடர்பு)

அறிஞர்காள்! ஓர்காலத்து சியவனர் என்னும் மஹரிஷியின் புத்திரரான ரிசீகர் என்பவர் தாம்விவாகம்செய்துகொள்ளவேண்டிக் காதியென்னும் ஓர் அரசனிடம் சென்றார். அவர் அரசனது அரும்புதல்வியாகிய சுதரிசனை என்பவளைத் தமக்குக் கன்னிகாதானம் செய்யும்படி வேண்டிக்கொள்ள அக்காதியென்னும்அரசன் தன்புதல்வியைக்கொடுக்க இசையாதவனாய் அவர்க்கு ஓர் போக்குவிடவேண்டி ஓமுனிமணியே! நான்கேட்கும் பொருளைக் கொடுப்பின் உமக்கு இப்பெண்ணைத் தருவேனென்றான். அதற்கு அந்த ரிசீகர் தாம் எதுகேட்டபோதிலும் கொடுப்பதாய் ஒப்பினார். உடனே அக்காதியென்னும் அரசன், ஓர்காது கறுத்து முற்றிலும் வெண்மையுள்ள புரவிகளிற்பதினா

[illegible]

யிரம் தரின் என் பெண்ணைத் தருவேன் என்ன அதற்கு அம்முனிவர் அங்ஙனமே ஆகுகவென்று ஒப்பிச் சிறிதுதியானித்து அவ்விதக் குதிரைகள் உச்சைசிரவத்தின் குலத்தில் உதித்துவருணலோகத்தில் இருப்பதாயறிந்து அங்கேபோய் வருணனைக் குறித்துத் தவஞ்செய்தார். அவர் தவத்துக்கு மெச்சிய அவ்வருணன் ஓ முனிமணியே! நீர் எத்தண்ணீர்க்கரையில் நினைப்பீரோ அவ்விடத்தில் அக்குதிரைகளைத் தருவேன் என்று வாக்களித்துச் சென்றார். உடனே அம்முனி அவ்விடம்விட்டு க்கங்காதீரம் சென்று குதிரைகளைப்பற்றி நினைத்து உடனே அவ்விடத்து அவர்பெற்ற குதிரைகளை அக்காதியினிடம் செலுத்தி அவள் பெண்மணியாகிய சுதரிசனையை விவாகஞ்செய்துகொண்டு கானகஞ்சென்றார். அங்கு அப்பெண் அவருக்குச்செய்து வந்ததொண்டுகளால் அகமகிழ்ந்து ஓ பெண்மணியே! யான் உனக்கோர் வரந்தருகின்றேன் பெற்றுக்கொள்ளென அதற்கு அவள் தனது நாயகனைப்பணிந்து தன்தாயின் மனதை அறிந்து பின் கேட்டுக்கொள்வேனென மொழிந்து தாயினிடம் சென்றாள். சென்று அம்மா! யாதுவரங்கேட்கலாம் என்றுவினவ அதற்கு அவள் உத்தம க்ஷந்திரியனாகிய ஓர்புதல்வன் எனக்கும் உத்தம பிராமணனாகிய ஓர் புதல்வன் உனக்கும் கிடைக்கும்படி ஓர்வரங்கேட்பாயென்றாள். அவள் அங்ஙனமே கேட்க அம்முனிவர் இரண்டு சருக்களை எடுத்துக் கொடுத்து ஒன்றை நீயும் மற்றொன்றை உன் அன்னையுமாகப் புசிக்கக்கடவீர் என்று ஆணையிட்டார். அவ்விதம் அச் சருக்களைப் பெற்றச் சுதரிசனை தன் தாயிடம் செல்ல அவள் தன்மனைவிக்கென அவர் ஏதேனும் விசேஷமாய்க் கொடுத்திருப்பாரென எண்ணி மகளே! என்சருவை நீ புசி; உன் சருவை நான் புசிக்கிறேன் என்று இருவரும் அங்ஙனமே மாறிப் புசித்தனர். அதன்பின் சிறிதுகாலங்கழித்து ரிசீகர் ஓர்நாள் தன் பத்தினியைப் பார்த்து அவள் கர்ப்பத்தில் க்ஷத்திரியமகன் இருத்தலை யோகத்தாலறிந்து பெண்ணே! யாது குற்றம் செய்தனை! என்றார். உடனே அவள் உள்ளங்கலங்கி உண்மையைச் சொல்லி சுவாமீ! தாயின்சொல்கேட்டுத் தவறினேன்; தயைகூர்ந்தருளல் வேண்டுமென்று தாள்களைப் பிடித்துக்கொள்ள, அவர் பெண்ணே! உன் வயிற்றிற் பிறப்பவன் கொடூரமான க்ஷத்திரியனும் உன் தாய்வயிற்றிற் பிறப்பவன் பிர்மக்ஞானியுமாவான் என்றார். உடனே அவ்வங்கனை சுவாமி! தேவரீருடைய புதல்வன் அங்ஙனமிருத்தல் அருமையோ அதை எவ்விதமேனும் மாற்ற வேண்டுமென்று பின்னரும் வேண்ட, அவர் அதற்கிசைந்து உனக்குப் புதல்வன் அங்ஙனமில்லாவிடினும் அவள் புதல்வன் அவ்விதமாகக் கடவன் என்றார். அதனால் அவர் புத்திரராக ஜமதக்கினி பகவான் உதித்து அவருக்குப்புதல்வனாகப் பரசுராமன் அவதரித்தார். அவர் பிராமண குலத்திற் பிறந்திருந்தும் அச்சருவின் பெருமையால் அவரிடத்தில் க்ஷத்திரிய தருமமான சௌரியம் நிலைபெற்றது. அக்காதி மகாராஜன்மனைவியால் விசுவாமித்திரர் புதல்வனாகப்பிறந்தார். அவர் க்ஷத்திரிய குலத்திற் பிறப்பினும் அதிசிக்கிரத்திற்றானே அந்த க்ஷத்திரியத்தன்மையை யொழித்துப் பிராமணனானர். இதுவே விசுவாமித்திரர் பிராமணனதற்கு முதற்காரணமாம்.

மற்றது பின்வரும்.

[illegible]

[illegible]

[illegible]

ஆரியாசாரம்.

(தொடர்பு.)

—():o:()—

உடையைத் தரித்துக் கால்களைக் கழுவி ஆசமனஞ்செய்ய வேண்டும். "நதியிருக்குமிடத்து மற்றைய நீர்களில் ஸ்நானஞ்செய்யலாகாது. நீர் நிறைந்தவிடமிருக்கக் குறைந்த சலத்தில் குளிக்கலாகாது. சண்டாளர்கள் தொட்ட கிணறு குளங்களில் ஸ்நானஞ்செயதல் கூடாது" என்று சந்திரிகை என்னுங் கிரந்தம் கூறுகின்றது. சாண்டில்லியரென்பவர் "சூத்திரர்கள், ஸ்திரீகள், நாத்திகர், பாஷண்டர், குழந்தைகள், வியாதியாளர் இவர்களுடன் சேர்ந்து ஸ்நானஞ்செய்தல் கூடாது" என்று சொல்லுகின்றார். ரோகிகளாயுள்ளவர்கள் வெந்நீரிலே ஸ்நானஞ்செய்தல் வேண்டும். ஸ்மிருதியர்த்தசாரம் "நித்தியகன்மங்களுக்கென ஒவ்வோர் தினமும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். சலத்தில் ஸ்நானஞ்செய்யச் சக்தியில்லாதவன் மிர்த்திகையால் அல்லது வெந்நீரால் ஸ்நானஞ்செய்தல் வேண்டும்" என்று கூறுகின்றது. "சுத்தமாயினும் அசுத்தமாயினும் தேவாலயங்களின் அருகிலுள்ள தீர்த்தம் கங்கைக்குச்சமானமாதலால் அது அநேக பாவங்களை ஒழிக்கும்" என்று சௌனகர் சொல்லுகின்றார். ஸ்நானஞ்செய்யச் சக்தியில்லாதவன் இடுப்பளவிலேனும் ஸ்நானஞ் செய்தலாவது அல்லது ஈரவஸ்திரத்தால் உடம்பைத் துடைத்துக்கொள்ளலாவது வேண்டும். வேதங்களிற் சொல்லிய மந்திரங்களால் தண்ணீரைப் புரோக்ஷித்துங் கொள்ளலாம். அல்லது கடவுளை ஒருவாறு தியானிக்கலாம். ஆதலாற்றான் ஸ்மிருதி ரத்தினத்தில் "நான்கு கையுடையவனும் மஹாதேவனும் சங்கு சக்கர கதைகளைத் தரித்தவனுமான விஷ்ணுவைத் தியானஞ் செய்தல் மானத ஸ்நானம் ஆகும்" என்று கூறப்பட்டுள்ளது. "கடவுளை நினைத்தலே மானத ஸ்நானம்" என்றும் "ஸ்நானங்களுள் மானத ஸ்நானமே சிலாக்கியமெனப் பெரியோர் கூறுவர்" என்றும் யாக்ஞவல்கியர் எடுத்தோதினர். சண்டாளர் முதலாயினோரைத் தீண்டியவரைத் தீண்டினும் உடனே ஸ்நானஞ்செய்தல் வேண்டும். அவரை மற்றொருவர் தீண்டில் அது புத்திபூர்வமானால் ஸ்நானஞ் செய்ய வேண்டும் அதுவும் இல்லாதவிடத்து ஆசமனஞ் செய்வதும் போதியதாம். நான்காவது மனிதனுக்கு ஆசமனமேயன்றி ஸ்நானமில்லை. சர்திப்பிரஷ்டர்களுக்கு ஓர் நுகத்தடியளவும் மாதவிடாயுள்ள மாதர்களுக்கு இரண்டு நுகத்தடியளவும் பிரசவித்த ஸ்திரீகளுக்கு மூன்று நுகத்தடியளவும் சண்டாளருக்கு நான்கு நுகத்தடியளவும் ஒதுங்கிச்செல்லவேண்டும். இவற்றினுட்படின் உடனே ஸ்நானஞ்செய்தல் வேண்டும். நுகமென்பது இரதத்தின் நுகம் ஒன்பது அடியும் வண்டியின் நுகம் எட்டடியுமென அளக்கப்படும். சம்வர்த்தமாமுனிவர் கூறுவதாவது "சங்கடத்திலும் மேடுபள்ள

[illegible]

ங்களிலும் குறுகிய வழிகளிலும் பெரும் பட்டணங்களிலுள்ள மார்க்கங்களிலும் முற்சொன்ன விதிகளைச் சிறிது விலக்கிக்கொள்ளலாம்" என்பது. புற்களால் செய்யப்பட்ட ஓர் ஆசனத்தில் தாம் தீண்டவொண்ணாத நிலைமையுள்ள மற்றொருவருடன் இருக்கலாகாது, சண்டாளரன்றி மற்றையோரை அசுசியாயுள்ள காலத்துத்தீண்டின்தீண்டினவன்மட்டில் ஸ்நானஞ்செய்தல் வேண்டும். எக்கருமம் செய்யுங்காலத்தும் போசனத்தும் பூனையின் வாலைத்தொட்டால் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். "பூனை, ஈ, எறும்பு, புழுக்கள், வெட்டுக்கிளி, தவளை இவை முதலியன எல்லா வத்துக்களிலும் சம்பந்தப்படுவனவாதலால் இவைகள் தொட்ட வஸ்து எச்சிலாகாது" என்று மனு எடுத்துரைத்தார். இரவில் ஸ்நானஞ்செய்தல் சலம் உட்கொள்ளல் இவையெல்லாம் விளக்கின் முன்புதானே செய்தல்வேண்டும். இரவில் தொடக்கூடாத ஒன்றைத் தொட்டால் வெந்நீரில் ஸ்நானஞ்செய்தல் வேண்டும். சுபாகன் சண்டாளன் இவர்களின் நிழல் பட்டபோதும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். நாற்பது அடிக்கு மேற்பட்ட நிழல் பட்டால் ஸ்நானஞ் செய்ய வேண்டுவதில்லை. பிணியாளர் ஸ்நானஞ் செய்ய நேரின் அவர்களைப் பன்னிருமுறை பிறரொருவர் தொட்டுத் தொட்டு ஸ்நானஞ்செய்யின் அவர்க்கு அதனால் சுத்தியுண்டாம். ஸ்நானம் செய்பவர் தம்மைத்தொடும் ஒவ்வொரு முறையிலும் அப்பிணியாளி சுத்த வஸ்திரந் தரித்தல்வேண்டும். ஆலயங்களில் மகோற்சவங்களை நிறைவேற்றியும் திருமணச் சபைக்குச் சென்றும் பந்துக்களை வணங்கியும் ஸ்நானஞ் செய்யலாகாது. தமக்கு மகவுபிறந்த காலத்தும் கிரகண காலத்தும் இராக்காலமாயினும் ஸ்நானஞ் செய்யவேண்டும். பகலில் ஸ்நானஞ் செய்யாதவன் இரவில் வெந்நீரில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். கண்ணோப் முதலிய சில ரோகங்கள் ஒருவனைப் பார்த்த காலத்தும் தொட்டகாலத்தும் ஒட்டிக்கொள்வதுபோல் சுத்தி அசுத்திகளும் ஒருவர் சரீரத்திருந்து மற்றொருவர்சரீரத்துக்குவரும். சண்டாளர் முதலாயினோரும் மனிதர்தாமே; அவர் மட்டும் அசுத்தியுள்ளவராதல் எப்படியாமெனில் சண்டாளருக்குப் பிறப்பாலும் குடித்தல் முதலிய அசுசிகளாலும் அவர்கள் அத்தன்மையராகின்றார், பெண்களுக்கோ மாதவிடாய் முதலிய அசுசிகளால் சிலகாலங்களில் அசுத்தியுண்டாகின்றது. இனி ஸ்நானஞ் செய்யச் சக்தியற்றவர்களுக்கு அநுகற்பம் யாக்ஞவல்கியர் கூறுவதாவது "தண்ணீரில் ஸநானஞ் செய்தல் புரோக்ஷித்தல் சலத்தைத் தொட்டு மந்திரித்தல் தண்ணீரை நோக்கல் அகமருஷண மந்திரத்தை மும்முறைசெபித்தல் இவையெல்லாம் பெரியோர் ஸநானமென்று சொல்வார்கள்" என்பதும் சலமத்தியில் சுத்தனாய் விஷ்ணு காயத்திரியை உச்சரித்தல் வேண்டும். வியாகிருதியோடு கூடிய மகா காயத்திரியை உச்சரித்தல் வேண்டும். நாராயணனைத் தியானித்தல் வேண்டும். பாவங்

[illegible]

[illegible]

[illegible]

"கள் விட்டொழியும்" என்பதுமே. கிரகணகாலத்து ஸ்நானஞ்செய்தல் ஆவசியகமே. வியாதியுடையவனேனும் அக்காலத்து வெந்நீரால் ஸ்நானஞ்செய்தல் வேண்டும். "கிரகணகாலத்தில் தண்ணீரெல்லாம் கங்கைக்குச் சமானம்; பிராமணரெல்லாம் பிரமதேவர்க்குச் சமானம்; தானமெல்லாம் பூதானத்துக்குச் சமானம்" என்று வியாசாசாரியர் சொல்லுகின்றார். கிரகண காலத்தில் ஸநானஞ் செய்யாதவனுக்கு ஏழு சன்மம் வரையில் ரோயுண்டாமென்றும் ஆதலால் அக்காலத்து ஸ்நானஞ்செய்தல் யாவர்க்கும் அத்தியாவசியகமென்றும் பெரியோர் கருத்து. "மாகமாசத்தில் விடியற்காலத்தில் ஸ்நானஞ் செய்தவன் பரலோகத்தைப் பெறுவான்" என்றிருத்தலால் மாகமாசத்து விடியற்காலத்துச் செய்யும் ஸநானம் அநேக பாவங்களைத்தொலைக்கும். சோமவாரம் சனிவாரம் புதவாரங்களில் எண்ணெயிட்டுக்கொள்ளல் வேண்டும். சங்கிரமணம் வ்யதீபாதம் சன்மநக்ஷத்திரம் ஏகாதசி சதுர்த்தசி அஷ்டமி பிரதமை சஷ்டி பர்வகாலங்கள் இக்காலங்களில் எண்ணெயிட்டுக் கொள்ளலாகாது. குழந்தைகளுக்கும் ரோகிகளுக்கும் விருத்தர்களுக்கும் இம்முறை ஆவசியகமில்லை. காலையில் எண்ணெயிட்டுக் கொள்வது குற்றத்திற்கிடமாம். நரகசதுர்த்தசி தினத்தில் சூரியன் உதிப்பதன்முன் ஸநானஞ்செய்தல் வேண்டும். ஸ்மிருதியர்த்தசாரமென்னும் புத்தகத்தில் "சதுர்த்தசியன்று இரவில் நரகாசுரனை யொழித்தாராதலால் அன்றைய உதயத்தில் நரகபயமுள்ள ஒவ்வொருவரும் அப்பியங்க ஸநானஞ் செய்தல் வேண்டும். தயிலத்தில் இலக்ஷ்மியும் சலத்தில் கங்கையும் அத்தீபாவலி தினத்தில் வசிக்கின்றார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

வரும்.

சுபமஸ்து.

ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஐயா! தாம் சில பத்திரிகைகளில் எழுதிவரும் விக்கிரகாராதன விஷயத்தைக் கண்டு களிகூர்ந்தோம். ஆரியசமாஜத்தவர் ஐயமேற்கொண்டு சில கேள்விகள் கேட்டதும் நமக்குச் சாதகமாயிற்று. அவர் அங்ஙனம் எழுத அதற்கென நாம் கங்கணம்பூண்டு பிரமாணங்கள் பல தேடி மிக்க பக்தியுற்றோமல்லவா? உலகெங்கும் உலோகங்களால் ஏற்படுத்திய பிம்பங்களில் கடவுளை வழிபடுவதற்கு உதாரணமாய்த் தாங்கள் வடிவெழுத்தையும் ஒலியெழுத்தையும் எடுத்துக்காட்டி அவ்வடிவெழுத்தைக் கொண்டு ஒலியெழுத்தை அறிவதுபோல் என்று தாங்கள் எடுத்துக்காட்டியது மிகப்பொருத்த முடைத்து இது லோகத்தில் மாத்திரம் ஏற்பட்ட விஷயமல்ல. பின்னை மந்திரம் யந்திரம் முதலியவற்றை எடுத்துக்காட்டும் மந்திர சாத்திரங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அச்சாத்திரத்திற் சொல்லியபடி நடக்கும் நம் மாந்திரீகர்கள் கோடுகளை

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

—:o:—

[illegible]

ந்த யந்திரங்களில் நீலகண்டன் கருடன் முதலிய தேவதைகளை வழிபட்டு விஷம் முதலியவற்றை ஒழிக்கின்றாரல்லவா? கடவுள் வழிபாடென்பது ஜெபம் ஓமம் பூசைமுதலியவற்றால் அவர் திருவருட்பிரசாதம் பெறும் வழியே அதில் பூசையென்பது யந்திரத்தில் அல்லது பிரதிமைகளில் கடவுளை உபசரித்தல். யந்திரமென்பது திரிகோணம் ஷட்கோணம்முதலிய கோடுகள் பேற்றதும் தங்கம் முதலியவற்றால் செய்யப்பட்டதுமானது- அதுவே பூசையில் முக்கியாங்கமென மாந்திரிகர் கருத்து. அவ்வியந்திரங்களிற் பூசித்தார்முன் கடவுள் எளிதில் அருள்புரிவார். அதைத் தரிப்பித்தும பிசாசங்களை ஓட்டுகின்றார்கள். யாம் முன்னமே மந்திரங்களைப்பற்றி உபந்நியசித்தவிடத்தில் பிணிகளினும் பிசாசம் வேறென எடுத்துக்காட்டினோம். அஃது வேதங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. நம்மவருட் சிலரே பிசாசங்களை நம்பமாட்டோமென்கின்றாரோவெனின், அவர்களுக்கு அவரினத்தாரில் சிலருக்கு அவ்வித உபத்திரவம் சம்பவித்தாலன்றி அதன்முன் நம்பிக்கையுண்டாகாதுதான். இது மந்திர சாத்திரத்தில் மட்டோ. சிவாகமம் விஷ்ணுவாகமம் முதலியவற்றிலும் பிம்பங்களில் இருதயமுதலிய இடங்களில் பீஜாக்ஷரத்தை எழுதும் வழி இருக்கின்றது. இங்ஙனமிருக்க, அந்தோ! நம்தேசங்களிற் சிலர் வழியறியாது மந்திரங்களைச் செபித்து அதனாற் பயன் பெறாது அவைகளைப் பொய்யெனச்சொல்லத்துணிகின்றார்கள். இனி அவருடன் வாது நமக்கென்னை. உலகத்தில் வடிவெழுத்துகளை ஒலியெழுத்தாயெண்ணுவதினாற்றானே ஒருவன் பயன்பெறுவானாயின் பரிபூரணமான கடவுளைப் பிம்பத்தின்கண் வழிபடுதலால் ஏன் பயன் பெறாது போவான். ஆதலால் பிம்பங்களில் ஈசுரனைப்பாவித்தல் நற்பாவனையென்று முடிந்தது.

இங்ஙனம்,

இலத்தூர், சுந்தரராஜசாஸ்திரிகள் எழுதிய அநுமோதனம்.

(மொழிபெயர்ப்பு.)

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்: சர்வதாரி-ஹூ பங்குனி-மீ 20-வ

கடவுள்.

முன்தொடர்பு.

—:o:—

இனிக் கடவுளுண்டென்று ஒப்பியும் நாத்திகர் வாதங்களிற் குற்றங்கள் நிறைந்திருப்பதுபோல ஆத்திகர் வாதங்களிலும் குற்றங்கள் பலவுண்டெனக்கொண்டு "கடவுளொருவர் இருப்பரேல் அவர் ஏன் தாரதம்மியமாய்ச் சிருட்டிக்கின்றார்" என்று கேட்கின்றார்கள். அவர்கள் கருத்து வருமாறு:—முன்னீர் எடுத்துபதேசித்த வழி அணுமுதல் காலம்வரையிலுள்ள வஸ்துக்கள் காரணமாகாமை யுண்மையே. ஆயினும் கடவுளை ஒப்புதலும் குற்றமுள்ளதாயேமுடிகின்றது. எங்ஙனமெனில்,

[illegible]

ஒரு கடவுளை நாம் ஒப்பவேண்டில் அவன் சர்வ வல்லமையு ள்ளவனாயும் எல்லாமறிய வல்லவனாயுமிருத்தல் வேண்டும். அவன் அத்தன்மையுள்ளவனாயின் உலகத்தில் நாம் காணும் விசித்திர சிருட்டி எவ்விதம் நிலைபெறும். ஓர் சிற்பி உலகத் தில் பற்பல பிம்பங்களைச் செய்துவர ஏதேனும் ஒன்று கை கால்முதலிய அவயவங்களிற் குறைவெய்தியவிடத்து அவன் தவறிப்போனானென்றும் அவன் அறிவு சிற்றறிவென்றும் அவன் மயக்கமுள்ளவனென்றும் சொல்ல நேரிடுகின்றதே. அவன் ஒரு பிம்பத்தைச் செய்யுமிடத்து ஓர் தவற்றால் இங்ஙனம் அறிவீனனெனப் பேரொடுப்பனாயின் ஒவ்வொரு பிராணி களுக்கும் ஒவ்வோரிடங்களில் குறைவுடனும் வேற்றுமை யுடனும் சிருட்டித்துவரும் கடவுளுக்குச் சர்வஞானமும் சர்வ வல்லமையும் அமைவதெப்படி ? உலகத்தில் ஒருவன் தன் பொருட்டேனும் பிறர் பொருட்டேனுமின்றி ஓர் பொருளை உண்டாக்கக் காணோம். பெரியோரும் பயனற்ற வினை செய் யற்க என்றே ஆணையிடுகின்றார்கள். அங்ஙனமிருக்க இவர் எவர்பொருட்டு எப்பயன் கருதி இங்ஙனஞ் செய்கின்றார். இனி அதுவும் ஓர் பயன் கொண்டேயெனக்கூறினும் அது இப் பயன் குறித்தென்று துணிய இடமில்லை. வேற்றுமை மட் டோ, ஜீவர்களுக்கு மிகுந்த துன்பந் தரத்தக்க பல அங்கக் குறைவுள்ள சரீரங்களுண்டாவதையும் யாம் காண்டலால் அத னால் ஜீவர்களுக்குச் சுகம் சிறிதுமில்லையென்பது எல்லோரு மறியக்கூடியதா யிருந்தும் ஆத்திகர் கூறும் வழி அவருக்கு அடையவேண்டிய பொருள் யாதுமின்மையானும் அவ்வித சிரு ட்டி காரணமற்றதேயென்று ஏற்படுகின்றது. இனி ஊமை குருடு செவிடு முதலியவை உண்டாதல் தாய் தந்தைகளின்குற் றமேயென்று சொல்லின் அதற்கு ஈசுரன் வேண்டுவது அவ சியமில்லையெனப் புலப்படுகின்றது. அவ்விதமே மனிதர்களு க்குள் வேற்றுமையும் அதே காரணங்கொண்டு முடியும். எங் ஙனமெனில் உலகத்தில் கரியநிறமுள்ள மாதரும் வெண்ணி றமுள்ள புருஷரும் அல்லது வெண்ணிறப் புருஷரும் கரு நிறமாதரும் கலந்து பெற்றெடுக்கும் ஓர் குழந்தை இருநிற க்கலந்த மற்றோர்விதமாக விருக்கக் காணலாம். அவ்விதமே அவ்விரு நிறங்கலந்த ஓர் புருஷன் மற்றைய அநேக வர்ணங் களுள்ள பெண்களுடன் கூடப் பற்பல நிறங்களுள்ள குழந் தைகள் உண்டாகின்றன. அவ்விதமே நெடியவன் குறுகிய பெண்களுடனும் குறுகியவன் நெடிய பெண்களுடனும் பருத் தவன் சிறுத்த பெண்களுடனும் சிறுத்தவன் பருத்த பெண்க ளுடனும் கலப்பதால் பற்பல வித்தியாசங்கள் உலகத்திலுண் டாகின்றன. மேலும் கருப்பவதிகளாயுள்ள ஸ்திரீகள் ஆகா ரம் படுக்கை முதலியவைகளைச் சரியாக நடத்தாமையாலும் அவ்வச் சரீரத்தின் உஷ்ணாதிகள் வேறுபடுதலாலும் குருடு கூன்முதலிய பற்பலவிதமான பிறவிகளுண்டாகின்றன. ஆத லாற்றான் வைத்திய சாத்திரத்திலும் கர்ப்பிணிகளைப்பற்றிய விதிகள் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை அதிசூக்ஷமமாதலால் அவைகளை நாம் அறிந்து நடத்தக்கூட வில்லை. இதுகொண்டு நாம் கண்ணாற் காணக்கூடாத கடவுளு ண்டெனத் தாபித்தல எவ்வாற்றானும் பொருந்தாது. உலக த்திலுள்ள பிராணிகளிற் பெரும்பான்மை தாய்தந்தையர் உரு வங்களைப்பற்றியே உண்டாகின்றன. ஆதலாற்றான் வேதமும் "ஒவ்வோரங்கத்தினின்றும் உண்டாகின்றாய்; இருதயத்தினி

[illegible]

ன்றும் உண்டாகின்றாய்; ஆன்மாவே புத்திரனாகின்றான்; நீ நீடூழி வாழ்வாயாக" என்று எடுத்தோதுகின்றது. உலகத்தில் வலி மிகப்பெற்றோர் புதல்வர் வலிபெற்றவராகவும் பலவீனர் பிள்ளைகள் பலமற்றும் இருக்கக் காண்கின்றோம். ஆதலால் யோனிசங்கள அண்டசங்களில் பெற்றோரைப் பற்றிய தாரதம்மியங்களே நிலைபெறுகின்றன. புல் பூண்டுகளிலும் விதை, நிலங்களின் வேற்றுமையே அதன் வேற்றுமைக்குங் காரணமாகின்றது. ஆதலால் இவ்வித தாரதம்மிய சிருட்டியைக்கொண்டு ஓர் சர்வ சக்தனாகிய கடவுளுண்டெனத் தாபித்தல் எவ்வாற்றானு மியையாது. அது இயற்கையிற்றான் உண்டாகின்றன வென்னும் வாதத்தில் இவ்வளவு ஆக்ஷேபங்களில்லை. இனி அவ்வாதத்திலும் பலவித ஆக்ஷேபங்களுள்ளன வாமென்பீரேல்நாம் நடுவுநிலைமையாய் அப்பரம்பொருள் உண்டென்பவனுக்கு உண்டென்றும் இல்லையென்பவனுக்கு இல்லையென்றுமே சொல்வோம். இனி எவ்வாற்றது ஒருவன் நோக்க உண்மையும் மற்றொருவனுக்கு இன்மையுமாகின்றதோ அஃது முற்றிலும் அசத்தென்றே கொள்ளற்பாலதாம். ஆதலாற்றான் ஆத்திகருட் சிலர் கடவுளை நோக்க அசத்தும் சீவர்களை நோக்கச் சத்துமான உலகம் அசத்தென்றே கொள்கின்றார்கள். அங்ஙனமே கடவுள் ஒருவனுக்குச் சத்தும் ஒருவனுக்கு அசத்துமாதலால் முற்றிலும் அசத்தென்னலே யுக்திக்கொத்ததாமென்பதே. ஐயா! இவ்வித வாதம் இத்தேசத்து முன்னிருந்த சப்த பங்கிகளென்னும் சமணர் வாதமே. இவர் அருகன் சுதகன் இவர்களைப் போன்றவர்களே. இவரது சித்தாந்த மகாவாக்கியம் (அத்தி நாத்தி) உண்டு இல்லையென்பதே. இவர்களுக்குச் சமாதானம் இங்ஙனம் கூறுக:—உலகத்தின்கண் பிரதிமைகளைச் செய்பவன் ஒருக்கால் தவறினால் அவன் சிற்றறிவுடையவன், மயங்கினான் எனுங் குற்றமையுடையாயினும் கடவுளிடத்தில் அது பொருந்தாது. யாம் முன் கேள்விக்கு விடையளிக்குமிடத்திற்றானே அவ்வித வேற்றுமைகள் மனிதருக்கு அவசியமென்றும் அவ்வேற்றுமைகளை எல்லாமறிய வல்லவனே அமைக்க வல்லவனென்றும் அவனின்றி அது அமையாதென்றும் எடுத்து நிரூபித்தோம். அதனை ஆண்டுக் கண்டு தெளிக. இனி இவர் கூறியபடி உலகத்தில் ஓர் நியமமுமில்லை. எங்ஙனமெனில், தாயும் தகப்பனும் இருவரும் வெண்ணிறங்கொண்டிருக்க அங்கு கரிய நிறமுள்ள பிள்ளைகளும், இருவரும் வலியுள்ளவர்களாயிருக்க அவர்க்கு வலியற்ற பிள்ளைகளும் உண்டாகக் காண்கின்றோமாதலாலென்க. மேலும் தமது அவயவங்களிற் சிறிதுங் குறைவுபெறாது நிற்குந் தாய் தந்தைகளுக்கும் அவயவக் குறைவுள்ள குழந்தைகள் பிறக்கக் காண்கின்றோம். பெற்றோரது உருவமும் அமைப்பும் பிள்ளைகளிடமுண்டாமென்பதும் பொதுவிதியேயன்றிப் பிறிதன்று. உலகத்திற் பெற்றோரின் ஒவ்வோரவயவங்களின் சாராம்சங்களினின்று பிள்ளைகளுண்டாமென்னின் அவயவம் நன்றாகப் பரிபூர்த்திபெற்ற ஒருவனுக்கு அவனிலும் அங்கக்குறைவ

[illegible]

யும்வேறு விதமாயும் புதல்வர் பிறப்பது யாதுகாரணம்பற்றியெனச் சொல்லலாம். இனிக் கருப்பகாலத்தில் அவர்கள் செய்யும் ஆகாரம் முதலியவைகளே அதற்குக் காரணமாமெனிற் காட்டிற் சஞ்சரிக்கும் முரட்டு மனிதர்களுக்கு இவை மிகச்சம்பவிக்குமாதலால் அவர்களுக்கு அவயவக் குறைவின்றிக் குழந்தைகள் பிறக்கவும் காட்டிலுள்ளவர்க்கு மாறாகவும் பிறக்கக் காரணம் யாது? மேற்றிசையார் வெட்கத்தை விட்டுப் பெரும் பெரும் பள்ளிகளில் வைத்தியத்தில் கர்ப்பசிகிச்சை முதலியவற்றைப் பெண்களுக்குக் கற்றுக்கொடுப்பினும் அவர்களுக்கும் கூன் குருடு செவிடு முதலியவை பிறக்காதொழியவில்லையே. ஆதலால் நாம் இவ்விஷயத்திற்கு காண்டற்கரிய காரணத்தை ஒவ்வுதலே உசிதமென்பது பெறப்பட்டது. உலகத்தில் எவ்வெப் பிராணிகளுக்கு வேற்றுமைகளால் பயனுண்டோ அவ்வப் பிராணிகளுக்கு அவ்வவ்வேற்றுமைகளைக் கடவுளே அமைப்பனென்பது வாய்மையாம். இனி ஒருவன் நோக்கத்திற்குச் சத்தும் ஒருவன் நோக்கத்திற்கு அசத்துமாய்த் தோன்றுதலினால் அதுகொண்டு கடவுள் அசத்தெனக்கூறல் அமையாது. உலகத்தில் குருடனை நோக்க நாம் அசத்தும் கண்ணுள்ள சிலரை நோக்க நாம் சத்துமாதலால் யாம் அசத்தேயென இவர் கூறத்துணிவரோ யாதோ அறியேம். இனி அறியத்தக்க கருவியிருக்க அறியக் கூடாதிருத்தலே அதற்குக்காரணமெனின், இவருக்கும் பரமேசுவரன் உண்மையை அறியத்தக்க நூலாராய்ச்சியின்மையின் இவர் அறிவு போலியறிவாமென்க. தாய் தந்தையர் சரீரத்திற்கியைந்ததே புத்திர சரீரமுமென்பதற்கு இவர் எடுத்துக்காட்டிய வேதவாக்கியமும் இவர்கொண்ட கருத்துடையதல்ல, தாய் தகப்பனது சரீரத்தின் சாரமாகிய விந்துவே புதல்வர் சரீரத்துக்குக்காரணமாமென்பதே அதன் கருத்து. சீவன் சரீரத்தினும் வேறானவனென்றும் நித்தனென்றும் "ஆன்மாவும் சரீரமும்" என்னும் இடத்தில் முன்னரே எடுத்துக் காட்டினோம். இனி சீவன் சரீரத்தின் வேறாதலாலும் நித்தனாதலாலும் நித்த சரீரியாதலாலும் கன்மத்திற் கட்டுண்டவனாதலாலும் சிற்றறிவுடையவனாதலாலும் மறுபிறப்பையடையவேண்டியவனாதலாலும் அவனது கர்மபேதத்திற்கேற்பப் பற்பல சரீரங்களைக் கடவுளமைக்கப்பெறுகின்றான். இனி எக்கர்மத்தால் சீவன் கழுதைமுதலிய சரீரங்களிற் பிரவேசிப்பானெனில், இவ்விதக் கேள்விகளெல்லாம் யாம் "மறுபிறப்பு" என்னுந்தலைப்பின்கீழே எடுத்து மறுத்தோமாதலால் அவற்றை ஆண்டுக் கண்டுகளிக்க. இனி இவ்வித காரணங்களைக்கொண்டு இவ்வித வேற்றுமைகளெல்லாம் பூர்பவப்பயனே என்பது இனிதுதெளிக. தேசம் காலம் பாத்திரம் இவற்றின் வேற்றுமையும் கர்ப்பகாலத்தில் உண்டாகும் கோளாறுகளும் அதற்குத் துணைக்காரணங்களேயன்றி முதற்காரணங்களன்றென்பது துணிபு.

மற்றது பின்வரும்.

அவசியங் கவனிக்கத்தக்கது.

இந்துக்கள் தங்களினத்தார் புறமதமான அவைதிகமிலேச்ச கிறிஸ்துமதத்தில் செல்லாதிருக்க ஆங்காங்கு சபைகளை உண்டாக்கி, ஏதேதோ நல்ல வேலைசெய்துவருகின்றார்கள். வந்தும் 'அங்கே ஒருவன் கிறிஸ்தவனானான், இங்கே ஒருவனானான்' என்றிப்படிக் கூச்சலெழும்புகின்றது. சென்னை இந்துடிராக்ட்சோஸைட்டியார் அல்லும்பகலும் ஓயாது கஷ்டப்பட்டும் அதன் கிளையாரும் பாடுபட்டும் பயனைக் காணோம். பகைவர்முயற்சி மலையாயிருக்கிறது; நம்மவர் முயற்சி கடுகாயிருக்கின்றது. எப்படிக் காரியஞ் சாதகமாகும்! இ. டி. சொஸைட்டியார்க்கு எவ்வளவுபணம் வருகிறதோ, அவ்வளவுகாரியம் வஞ்சகமின்றிச் செய்கின்றார்கள். அதற்குப் பணமுள்ளவர்கள் கைகொடுத்தால் இன்னும்பெருவேலைகள்செய்து வைரிகளையோட்டுவார்கள். பணக்காரரெல்லாம் கையைமூடிக்கொண்டிருக்கிறார்கள்; பணப்பெட்டியைத் திறக்கவும் யோசிக்கிறார்கள்; வாயிலும் எழுத்திலுமாத்திரம் அபிமானத்தைக்காட்டுகின்றார்கள்; பணவிஷயத்தில் லோபிகளே. பாதிரிகளுடைய முயற்சியில் ஆயிரத்தில் ஒருகூறும், பணத்தில் பதினாயிரத்தில் ஒருபங்கும் இருந்தால் அன்றே பாதிரிகளுடைய சூது வெளிப்பட்டுப்போம். பிறகு அவர்களுக்கு இங்கு வேலையில்லை; வந்தவழி பெதுவென்று கேட்பார்கள். அவர்கள்வந்ததொடக்கத்திலேயே நாம் ஓட்டியிருப்போமானால் இவ்வளவனர்த்தம் வராது. அவர்களைக் கெவர்ன்மெண்டு மனுஷாளென்று நமது முன்னோர் நினைத்து, அவர்களைத் தடுத்தால் கவர்ன்மெண்டுக்கு அபராதியாய்ப் போவோமென்று பயந்திருந்தார்கள். இந்தக்குறிப்பை யுணர்ந்தே காய்ந்தமாடு கம்புகொல்லையில் மேய்ந்ததுபோல் நம்மவரை யெல்லாம் கெடுத்து நாசமாக்கிவிட்டார்கள். இன்னும் முழுதுங்கெடுக்க (அதாவது இந்துவைதிகமதம் அணுவளவும் தலைகாட்டா தொழிய) என்னென்ன பிரயத்தனமோ உள்ளுக்குள்செய்துவருகின்றார்கள். ராச்சியத்தைப்பிரிட்டிஷ்கவர்ன்மெண்டார்எப்படி அடக்கிஆண்டுவருகின்றார்களோ, அப்படியே கிறிஸ்துமதராச்சியமாக முற்றும் ஆளப்பார்க்கின்றார்கள். இந்தியா முற்றும் பிரிடிஷ் அதிகாரம் எப்படிபரவிற்றோ, அப்படியெ இந்தியாவில் பாதிரிகளுடைய அதிகாரம் முற்றும் பரவிவிட்டது. பாதிரிகள் எங்குந் நுழைந்துகொண்டார்கள். பாதிரிச்சிகளும் சுதேசகிறிஸ்தவச்சிகளும் வீடுகளில் நுழைந்து ஆரியமதத்தையிகழ்ந்து, அநாரியத்தன்மையுள்ள மிலேச்சமதத்தைப் போதித்துவரும் உள்கருத்தை யொருவருமறியாமல் இந்துக்கள் மௌனமாயிருக்கின்றார்கள். லக்ஷம்லக்ஷமாய்ச் செலவழித்துக் கோவில் கட்டுகின்றார்கள்; சத்திரங் கட்டுகின்றார்கள்; ஆயிரம் ஆயிரமாகச்செலவழித்து உற்சவஞ் செய்கின்றார்கள்; பதினாயிரம் இருபதினாயிரம் செலவழித்துத் தேர்செய்கின்றார்கள்; 100, 200 500, 1000 செலவழித்துவாகனங்கள் செய்கின்றார்கள் 10000, 20000 செலவழித்துக் கும்பாபிஷேகம் செய்கின்றார்கள்; 50000, 100000 செலவழித்துப் பழுது பார்க்கின்றார்கள்; ஆயிரக்கணக்காகச் செலவழித்துச் சுபாசுபங்கள் செய்கின்றார்கள்; இன்னும் தாசிகள் மெச்சவும் பலபேர் புகழவும் இன்னும் எவ்வளவோ காரியங்கள் செய்கின்றார்கள். இவ்வளவு செய்கின்றவர்கள் இந்துமதம் கெடாதிருக்கவும், இந்துமதத்தைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு இந்துக்களை ஜாதிப்ரஷ்டத்துவம், மதப்ரஷ்டத்துவஞ் செய்து, இந்து சாஸ்திரங்களைச் சதாகாலமும் தூஷிக்கும்பாதிரிகளைக் கண்டிக்கின்றார்களா? கிறிஸ்துமதத்தை (புண்ணியபூமியான இப்பாரதகண்டத்தைவிட்டு) தொலைக்கின்றார்களா? கோவில குளங்களெல்லாம் யாருக்கு? இந்துக்களெல்லாம் கிறிஸ்துமதப்பாழ்ங்கிணற்றில் வீழ்ந்து, ப்ரஷ்டத்துவமடைந்து, நமது மதவிரோதிகளாகப்போய், நம்மையே வேலைபார்க்க வருவார்களானால், கோவில் குளங்கள் என்ன பிரயோசனம்? இதுகளையெல்லாம் நம் இந்துக்கள் அறியவில்லையே! நமது மதத்தை முன்பு காத்து, பிறகல்லவா கோவில் குளங்களை யாதரிக்கவேண்டுவது? முன்பு செய்யவேண்டிய தருமம் மதத்தைப்பாதுகாக்கவேண்டுவது; பின்பு செய்யவேண்டிய தருமம் கோவில் குளங்களுக்குச் செய்யவேண்டுவது. இது நமது ஜனங்களுக்குத் தெரிவதில்லை. எதிரிகள் மறைத்துக் கபடமாய்ச் செய்யும் தந்திரங்கள் தெரிவதில்லை. டாருங்கள் நீலகிரியில் 2-பங்கு கிறிஸ்தவரும் ஒரு பங்கு இந்துக்களு மிருக்கிறார்கள் தூத்துக்குடியிலும் அப்படியே இரண்டு பங்கு கிறிஸ்தவரும் ஒரு பங்கு இந்துக்களு மிருக்கிறார்கள். இப்படியே அநேக ஊர்களில் கிறிஸ்தவர்கள் அதிகப்பட்டும் இந்துக்கள் குறைந்தும் இருக்கிறார்கள். இதனால் பின்னால் வரும் அனர்த்தங்களை நம்மவர்கள் அறிகின்றார்களில்லை. இன்னும் சில வருஷங்களில் என்ன மோசம் உண்டாமோ அறியோம்! 10000, 20000 லக்ஷம் செலவழித்துக் கோவில்கட்டி உற்சவஞ்செய்து மகா பத்திமான்களாயிருக்கும் இந்துக்களுடைய பிள்ளைகள், மிஷன் ஸ்கூல்களில் படிக்கிறார்கள்; பெண்களோ நமக்கு வைரிகளான பாதிரிகளுடைய பள்ளிகளையே தேடிப்போகின்றார்கள்; அவர்கள் வீடுகளிலோ மாட்டுக்கறிதின்னும் கிறிஸ்தவச்சிகள் போய்ப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறார்கள், தையலும் கற்றுக்கொடுக்கின்றார்கள். நாளை பிள்ளையும் பெண்ணும் கிறிஸ்தவர்களாகத் தடை யாது? இப்படிப்பட்ட தனவந்தர்கள் பலபேர் யேகோபித்து ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பாடசாலை வைக்கப்படாதா? கிறிஸ்துமதத்தை வேரோடு களையப்படாதா? அதனிமித்தம் பிரசங்கிகளை யேற்படுத்தப்படாதா? தாங்கள் செய்யாவிடினும் இதற்காக முன்வந்திருக்கும் சபையார்க்குப் பணசகாயஞ் செய்யப்படாதா? எத்தனையோபேர் பணத்தைச் செலவழிக்காமல் பூதம்போல் காத்துச் செத்தபின்பு, குடி சூது வியபிசாரம் இவற்றின் பொருட்டுப் பிள்ளைகள் வர்பிலாக அழிப்பிக்கின்றார்களே; இவர்கள் வித்தியா தருமத்திலும், கிறிஸ்துமதத்தைத் தாக்கி இந்துமதத்தை நிலைநிறுத்தும் பெரும்புண்ணியத்திலும்செலவழிக்கப்படாதா?

நம்மவர்களுக்கு அபிமானமில்லையே; உரோஷமில்லையே; துடிதுடிப்புண்டாகவில்லையே; ஆத்திரமில்லையே; மானமில்லையே; மதப்பற்றில்லையே; மற்றேதுமில்லையே; என் செய்வது; இப்படியிருந்தால் எல்லா மதங்கட்கு மேலான நமது ஆரியமதம் எப்படி நிலைநிற்பது? இல்லாவிடில் யாவரும் கிறிஸ்தவராய் விடுவோமா? இதற்கு ஒருவரும சம்மதிக்கமாட்டார்கள். சம்மதிக்காத பக்ஷத்தில் கிறிஸ்துமதம் இத்தேசத்தில் பரவாததற்குத் தக்கவாறு மனமொழி மெய்களாலும் திரவிய சகாயத்தாலும் முயலக்கடவோம்.

ஆரியமதாபிமானி.

கோபுசெட்டிப்பாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்பு.)

—:○:○—

அஃதிபாதெனில்:—நித்திய நைமித்திய ரூபமாகிய சர்த்வீக கர்மத்தினால் உள்ளபடி இருக்கிற தன்னைவிசாரிக்க சித்தசுத்திவரும். அச் சித்தசுத்தியினது வழியாய் நித்திய அநித்திய வஸ்துவிவேகம்வரும். அந்தநித்தியாநித்திய வஸ்து விவேக வழியாய் இஃபரலோக போகங்களில் நிராசையுண்டாகும். அதனால் சமாதியறுவகை சம்பத்திவரும். அதனால் மோட்சத்தில் இச்சையிறக்கும். அதனால் சத்குருலாபமுண்டாகும். அவற்றால் வேதாந்தச்ரவணம் கிடைக்கும். அதனால் மனனமும் அதனால் நிருத்தியாசனமும் அதனாலுள்ளபடியிருக்கிற ஆத்மஞானமும் வரும். இந்தப்படி ஏகதேசமானகர்மம் ஞானத்துக்குப் பரம்பரையான சாதனமென்றும் விசாரமுண்டாவதுவே சாக்ஷாத்சாதனமென்றும் சொல்லவேண்டியது.

இந்தத்திருட்டாந்தத்திற்கு அனுபவமுண்டாவெனில்உண்டு. அது எப்படியெனில், பசித்தவர்களுடைய பசியைப்போக்கித் திருப்தியாக்குவதற்குப் பக்குவமாகிய அன்னமே சாக்ஷாத்சாதனமும், உழவு முதலிய பயிர்களே பரம்பராசாதனமுமாயிருப்பதுபோல அஞ்ஞானத்தைப்போக்கி ஆத்மானுபவ திருப்தியாக்குவதற்கு நிஷ்காமகர்மமே பரம்பராசாதனமும், விசாரஞானமே சாக்ஷாத்சாதனமுமா யிருக்கின்றது. ஆகையால் மேற்குறித்த வேதசாத்திர புராணங்கள், யக்ஞாதி கருமங்கள் அவைகளை யனுட்டிக்க யோக்கியதையைப்பெற்ற பிராமண ஜன்மமானது ஜகதீசுவரனுடைய முகத்தினின்று வெளிப்பட்டதென்றும், பிராமண ஜன்மமானது உத்கிருஷ்டமென்றும், சத்தியவேதத்தினாலும் அனுபவத்தாலும் நிதர்சனமாக விளங்கிக்கொண்டே யிருக்கிறது. ஷெ வேதசாத்திரங்களின் ஒட்டபிப்பிராயமானது மனிதனுக்கு ஞானமும் அதினால் பிரமதத்துவ விசாரணையும் அதினால் மோக்ஷானந்த பிராப்திக்காக வென்றறியவேண்டியது. வேறே விஷயத்துக்காகவல்ல.

தூறள்.

ஒழுக்கத்துநீத்தார்பெருமைவிழுப்பத்து
வேண்டும்பனுவற்றுணிவு.

நாலு வேதம் ஆறுசாத்திரத்தின் துணிபாவது:—தத்தமக்குரிய ஒழுக்கத்தினின்று தறந்தவாது மகிமையை மேலானதென்று விரும்பும். துறத்தலாவது ஒழுக்கத்தினின்று துறக்கவேண்டும். தங்கள் தங்கள் வர்ணாசிரமங்களுக்குரிய ஒழுக்கங்கள் தப்பாமல் நடக்கப் புண்ணியம் வளரும்; அது வளரப் பாவம் தேயும்; அது தேயவறியாமை நீங்கும்; அது நீங்க நித்தியாநித்திய வஸ்து விவேகம் வரும். அதினால் இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்பும், பிறவித்துன்பங்களும் தோன்றும். அவை தோன்ற மோக்ஷத்திலாசையுண்டாம்; அது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி மோக்ஷத்திற்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாகும்; அது உண்டாகத் தத்துவஞானம் பிறந்து எனதென்பதாகிய மமகாரமும், யானென்பதாகிய அகங்காரமும் விடும், ஆகவின் இவ்விரண்டு பற்றுகளையும் வெறுக்க ஒழுக்கந்தான் முதலில் கொள்ளவேண்டிய முக்கிய காரணம்.

இதுவரையிற் பிராமண தர்மமும் அவர்களுக்குண்டாகிய அதிகாரமும் சொல்லப்பட்டது. பிறகு இதனடியில் க்ஷத்திரிய தர்மமும் தெரிந்தவரையிற் சொல்லப்படுகின்றன.

க்ஷத்தியதர்மம்.

1. பிரஜாபரிபாலனம், 2. வேள்விசெய்தல், 3. வேதாத்தியயனம், 4. துர்ஜன துஷ்ட மிருகம் பட்சி சத்துரு சங்காரம், 5. அன்னதானம், 6. வஸ்திரதானம், 7. கன்னிகாதானம், 8. பூதானம், 9. கோதானம், 10. உபயமுகிதானம், 11. ஹிரணியதானம், 12. எருமைதானம், 13. அசுவதானம், 14. வெண்மையான குதிரை தானம், 15. புண்ணிய காலத்தில் தானம், 16. காளாமுகிதானம், 17. மகாமேருதானம், 18. கற்பகவிருக்ஷதானம், 19. மஹாதானார்த்தமாகியகலைதே பாத்திரபரீட்சை விஷ்ணுபக்தி பிராமணபூசை பிராமணபக்தியாதி கர்ம யுக்தனானவன் க்ஷத்திரியன்.

வைசியதர்மம்.

சகலவிதமான அளவு நிறைகள் விஷயமான கணக்குகளையும் நாணயங்களின் குணதோஷ பரீட்சை வட்டம், வட்டிமுதலியவைகளை யறிந்துசெய்கிற வியாபாரம், கிருஷி கோரக்ஷணை, யஜனம், வேதாத்தியயனம், தானம், பிராமண பக்தி சூரியாதி தேவதாபக்தி கர்மயுக்தனாயிருப்பவன் வைசியன்.

சூத்திரதர்மம்.

பிரம, க்ஷத்திரிய, வைசியசேவை, தோட்டம், காடு, வயல் முதலிய க்ஷேத்திர ரக்ஷை சகல தேவதாபக்தி யுக்தனானவன் சூத்திரன்.

வரும்.

இஃது யாழ்ப்பாணத்து புலோலிவாசர்

செ. சாம்பசிவசாஸ்திரிகளால்சணிக்கப்பட்டது

சிவகாருண்ணிய சமுத்திரமாகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட முதனூலாகிய வேதத்துக்குப் பிரதான அங்கமாயுள்ள சாத்திரங்கள் ஆறு: அவை சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பனவாம். இவற்றுள் வேதபுருஷனுக்குச் சிட்சை மூக்கும், கற்பம் கையும், வியாகரணம் வாயும், நிருத்தம் செவியும், சந்தோவிசிதி பாதமும், சோதிடம் கண்ணுமாம். இந்த மூக்கு முதலிய அங்கங்களுட் கண் சிறந்தமைபோலச் சிட்சை முதலிய சாத்திரங்களுட் சோதிடமே சிறப்புடையது. சோதிடமாவது வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தற்குரிய காலவிசேஷங்களை அறிவிப்பது.

அக்கால விவகாரங்களை அறிதற்கு ஆவசியகம் வேண்டற்பாலனவாயுள்ள பூகோள, பகோளங்களைக் குறித்து ஆதியிற் பிரமா, சூரியன் முதலியோராற் செய்யப்பட்ட சித்தாந்த நூல்கள், பிரமசித்தாந்தம், சூரியசித்தாந்தம், வியாசசித்தாந்தம், வசிட்டசித்தாந்தம், உரோமக சித்தாந்தம் முதலிய பதினெட்டுச் சித்தாந்தங்களும், சித்தாந்தசிரோமணி, ஆரியபடசித்தாந்தம் முதலியவைகளுமாம். இவற்றுள் ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு வாருசி என்னும் இருஷியானவர் காலத்துக்குக்காலம் உண்டுபடும், அயன சலனம், அகசு, கிரகநிலை, கதிமுதலியவைகளை இப்பரதகண்டத்திலுள்ள எவ்வேத் தேசங்களுக்கும் எவ்வெக்காலத்துக்கும் இயையுமாறு அவ்வத்

தேசகாலபேத விதிகளை எல்லாம் திரட்டி வாக்கியகணிதம் என ஒரு நூல் இயற்றினர்.

இந்நூல்கொண்டு கணிக்கிற இவ்வாக்கிய பஞ்சாங்கத்தையே அநேக சதவருஷங்களாக இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள், மடாதிபர்கள், ஆதீனஸ்தர்கள், வித்துவான்கள், பெரியோர்கள் எல்லாம் அங்கீகரித்தும் இப்பஞ்சாங்கப்படியே வேதாகமங்களில் விதிக்கப்பட்ட விரதம், சிராத்தம், முகூர்த்தம் முதலிய வைதிக லௌகிக கிரியைகளைச் செய்தும் அதினாலே இஷ்டசித்திகளைப் பெற்றும், சாதகம் ஆரூடமுதலியவைகளினாலே பின்வரும் சம்பவங்களை அறிந்தும், இப்பஞ்சாங்கப்படியே, கிரணம் கிரகசாரம் முதலியவை சரிவருவதைக் கண்டும், சுருதி யுக்தி அனுபவங்களுக்குச் சரியானதென்று வழங்கிவருகின்றார்கள்.

மேலும் சூரியசித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்டு கணிக்கும் சித்தாந்த பஞ்சாங்கம் வடதேசத்திலே ஆந்திரர்கள், மகாராஷ்டர்கள், கருணாடகர்கள், கூர்ச்சரர்கள் முதலியோரால் நெடுங்காலமாக அநுட்டிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தச் சித்தாந்த பஞ்சாங்கம், அநுட்டிப்பிலே சாந்திரமானக்கொள்கை முதலிய சில பேதமேயன்றி, கிரணம், கிரகசாரம் திதி நட்சத்திரங்களில் அதிக பேதமில்லை.

இப்படி இருக்க இற்றைக்கு (23) வருஷகாலமாகப் பெம்பாயில் கெரோலட்மணசத்திரி என்பவரும் சென்னபட்டணத்தில் (20) வருடகாலமாக இரகுநாதாசாரியாரும், கும்பகோணத்தில் (12) வருடமாக சுந்தரேசுர சிரௌதிகளும், காசியில் வாபுதேவசாத்திரிகளும் ஐரோப்பியருடைய வானசாத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு அதிலுள்ள பதகங்களிற்கண்ட புடங்களின்படியே பஞ்சாங்கங் கணித்துவருகிறார்கள். இவர்களுடைய பஞ்சாங்கங்கள் அயனாம்சமுதலியவைகளில் ஒன்றற்கொன்று மிகவும் மாறுபடுகின்றன. சர்வதாரி வருஷத்துக்கு பெம்பாயிற் பஞ்சாங்கத்தில் அயனாம்சம் 18-பாகை 18-கலையாகவும், சென்னபட்டணம், கும்பகோணப் பஞ்சாங்கங்களில் அயனாம்சம் 22-பாகை 7-கலையாகவும், காசியிற் பஞ்சாங்கம் 22-பாகை 3 கலையாகவும் எடுத்திருக்கிறார்கள். இந்த அயனாம்ச வித்தியாசத்தினாலே சூரியாதி கிரகங்களுடைய பெயர்ச்சிகள் வித்தியாசப்படுகின்றன. (உதாகரணம்) பெம்பாய்ப் பஞ்சாங்கப்படி சூரியன் மேடராசியில் வந்து 3 தினத்துக்குப்பின் சென்னபட்டணத்துப் பஞ்சாங்கத்தின்படி அந்தராசியிற் சூரியன் வருகிறது. இவ்விதமாகவே பாதசாரங்களில் செவ்வாய்க்கும், வியாழனுக்கும், சனிக்கும், இராகுவுக்கும் முறையே 7, 45, 113, 71 நாள்களும் வித்தியாசப்படுகின்றன. இப்படியே ஐரோப்பிய சாத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு திருத்தமாகக் கணிக்கிறோமென்று கணிக்கிறவர்களுடைய திருக்கணித முதலிய பஞ்சாங்கங்களின் தன்மை இங்ஙனங் கிடக்கின்றது.

இது வேண்டுவோர் சிதம்பரம் ப்ரம்மவித்தியா யந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம். இதின்விலை அணா 4.

விளம்பரம்.

ஸ்ரீபகவத் கீதார்த்ததீபிகை இரண்டாவது பதிப்பு வெகுவாய் முடிந்து வருகிறது, 1889ஹு ஏப்ரல்மீ 15உ க்குள் வெளியிடப்படும். இது வெகுவாய் முதல் பதிப்பினுக்கிணங்கவும், அத்துவைதத்திற்கு ஆதாரமானவையும் விசேஷமானவையுமான அநேக உபநிஷத் வாக்கியங்கள் தமிழ் அர்த்தத்துடன் சேர்க்கப்பட்டும் இருக்கின்றது. கடுதாசி அச்செழுத்து பைண்டு முதலியன முன் பதிப்பைப்போல நேர்த்தியானதே. 697-பக்கங்களிலிருந்து 756-பக்கங்களாக விரிந்திருக்கின்றன.

கிரைய விவரம்.	ரூ	அ	பை
1889ஹு மார்ச்சிமீ 31உ க்குள் முன் பணம் அனுப்புவோருக்கு புஸ்தகம் ஒன்றுக்கு	3	0	0
மற்றவர்களுக்கு	4	0	0
பாக்கிங் போஸ்டேஜ்	0	6	0

10-புத்தகங்கள் ஒரேதடவையில் விலைக்கு வாங்குகிறவருக்கு ஒரு புத்தகம் இனாமாய்க் கொடுக்கப்படும்.

அடியில் கையொப்பமிட்டவருக்குப் பணம் அனுப்பவேண்டும். வாலியூபேயபில் போஸ்ட்டில் அனுப்பக் கோரினால் அனுப்பலாம். ஸ்டாம்பு லேபில் அனுப்புவதானால் ஒரு ரூபாய்க்கும் அதின் குறைந்த தொகைக்கும் ஒரு அணா வீதம் வட்டம் அனுப்பவேண்டும்.

வி-குப்புசாமி அய்யர்,
முதல்வகுப்பு வக்கீல்,
கோயமுத்தூர்.

பஞ்சதச உபநிஷத், வாசுதேவமனனம் இவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு புத்தகங்கள் சுவல்ப காப்பிகள்தானிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே தருவித்துக்கொள்ள வேண்டும்.

விலை முறையே காபி க-க்கு ரூபா 1 2 0, அணா-6. தபாற்செலவு அணா-1. வீதம் ஆகும்.

Tamil Works by P. Soondaram Pillay M. A.
Professor of Philosophy; College; Trevandrum.

1.	An Introduction to Science	0	8	0
2.	Tha Indian Hermit: a poem	0	0	6
3.	Manoonmanyan: a play.	(in the press)		

Apply to the author or to the Manager of the Ripon Press Madras.

திருவனந்தபுரம் காலேஜ் தர்க்காதி சாஸ்திர பண்டிதர் M. A. சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்டநூல்கள்.

நூற்றொகைவிளக்கம்.	0	8	0
சிவகாமி சரிதம்.	0	0	6
மனோன்மணீய நாடகம். (அச்சிலிருக்கின்றது)			

விரும்புவோர் மேற்படியாரிடத்திலோ சென்னை ரிப்பன் பிரெஸ் மானேஜரிடத்திலோ அபேக்ஷிக்கவேண்டியது.

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு,

இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணா 2.

சிதம்பரநாதபுராணம்	1	0	0
சிவகர்ணாமிர்தம்	0	12	0
சதுர்வேததாற்பரியசங்கிரகம்	0	4	0
யேசுமதநிராகரணம்	0	4	0
மாவையந்தாதி	0	1	0
ஞானசூடாமணி	0	2	0
இராமாயணதாற்பரிய சங்கிரகம்	0	2	0
பாரததாற்பரியசங்கிரகம்	0	2	0

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா தவக்கியது முதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பயின்டுசெய்யப்பட்டபுத்தகங்கள் 50-இரு விலைபெறுதபோக பாக்கியுள்ளகாப்பிகள் சொற்பதே; உள்ளகாபி மிகசொற்பமாதலின், ஒருவருடப்புத்தகம 1-க்கு 2—8—0 ஆகஇரண்டுவருடப்புத்தகங்கள் 5-ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போனல் வராது.

இந்து டிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887ஹூ ஏப்பிரல்மீ 27வ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:—'இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் ஹூ 1-இ குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்மீ முதல் மறுவருஷம் மார்ச்சுமீ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா. B. A. F. T. S. அவரகள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்த்திராதிபர், ப்ரம்மஸ்ரீ து. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் W.A. கிருஷ்ணமாசரரியார் B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

கடவுள் துணை.

Terms:—Cash. விலை ரொக்கம்.

NOW READY FOR SALE.

விரோதிவருஷத்திய

ரிப்பன் தமிழ்ப் பாக்கெட் பஞ்சாங்கம்.

விற்பனைக்குத் தயாராக விருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா ஆறு; பிரதி 1-க்கு தபாற்கூலி அணா அரை.

பாக்கிங் சார்ஜு பிரதி 1-க்கு 0-0-6; 10-க்கு 0-2-0; 25-க்கு 0-4-0; 50-க்கு 0-6-0; 100-க்கு 0-8-0.

ஒரேமுறையில் 10 புத்தகங்கள் வாங்குவோர்க்கு 1-ம்; 25-க்கு 3-ம்; 50-க்கு 7-ம்; 1000-க்கு 15-ம்; கம்மீஷன் கொடுக்கப்படும்.

கொஞ்சம் காப்பிகள்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவாதலின் வேண்டுவோர் கூடிய சீக்கிரம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மதராஸ் ரிப்பன்பிரெஸ். 316-தம்புசெட்டி வீதி சென்னை.

இங்ஙனம், சை. இரத்தினசெட்டியார், சொந்தக்காரர்.

ஸ்ரீ சிதம்பர ப்ரஹ்மவித்யா முத்ராக்ஷரசாலாயாம் முத்ரிதபுஸ்தகாநி

ஸ்ரீ ந்ருஸிம்ஹ கேஸரீக்ருத வ்யாகரணாதிஸூத்ர ப்ரகாசிகா ஸ்ரீ மீமாம்ஸா ந்யாய மீமாம்ஸா ப்ரணீத வ்யாவ்யாஸமிதா.	௦	௧	௦
ஸ்ரீ மத்ஸங்கரஸமவதாரவிரசிதா வைராக்யபஞ்சா / ஸ்ரீ ஹரிதத்தாசார்யக்ருத ஸம்ஸாரபஞ்சகம்	௦	௧	௦
வாதிராஜஸ்தவ: (ஸவ்யாக்யம்) ததா ஸ்ரீ தீக்ஷிதாசார்யவிரசித ஸ்துதிமாலா ஜயதீர்த்த ஸ்துதிகல்பத்ருமம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸகவிவிரசித ராஜ வாதிபஞ்சாநனம்	௦	௧	[illegible]
ஸ்ரீ தீக்ஷிதாசார்யஸ்துதி: தீர்த்தவராஹாஷ்டகம்	௦	௦	௬
ஸ்ரீ வேதாந்ததேசிக ப்ரணீதவிசார / விவேக சூடாமணி வ்யாக்யா / ஸிவதீர்த்தகவிகல்பத்ருமம்	௦	௦	௬
ஸ்ரீ ஸத்யஸந்தவிரசிதம் ராமாயணஸாரம்	௦	௦	௬
மேகஸந்தேசம். நாராயணகவி / விரசித ப்ரஹ்மவித்யா நாடகா / ஸாஹித்யம்	௦	௧	௦
ஸ்ரீ ஸ்ரீநிவாஸகவி க்ருத / ப்ரஹ்மவித்யா / ஸாஹித்யம். ஸ்ரீநிவாஸகவி க்ருதா / லக்ஷ்மீ ஸஹஸ்ரம்	௦	௧	௦
வேங்கடேசார்யக்ருதம் (ஸப்தசதகம்)	௦	௧	௦
வேங்கடேசார்யக்ருதா (ஸுப்ரபாதம்)	௦	௦	௬
வேங்கடேசார்யக்ருதா (ஸ்தோத்ரரத்னம்)	௦	௧	௬
வேங்கடேசார்யக்ருதம் ஸ்துதிசதகம்	௦	௦	௬
ஸஹஜராஜகவிவர்ணிதம் க்ருஷ்ணசதகம்	௦	௧	௬
ஸ்ரீ ராமபத்ரகவிக்ருதம் / பதஞ்ஜலி மஹாகாவ்யம்	௦	௱	
ப்ரஹ்மவித்யா வர்த்தமான / விதம் லௌகிக நாடகம்	௦	௫	௦

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.